//நீதிமன்ற வழக்கு தனிக்கவனம்// // மின்னஞ்சல் மூலம் //

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை-06.
ந.க.எண். 10030/அ3/இ1/2023 நாள் 27.12.2024

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி– 15.03.2023 நிலவரப்படியான உதவியாளர் பதவியிலிருந்து பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வுக்கு கூடுதல் தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டது – திருத்தப்பட்ட இறுதி கூடுதல் தேர்ந்தோர் பட்டியல் வெளியிடுவது – சார்பாக.

பார்வை: 1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர்தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.10030/ அ3/ இ1/2023, நாள். 27.02.2023, 30.10.2023, 15.11.2023 , 27.11.2023 02.09.2024 , 14.10.2024, 22.11.2024 மற்றும் 02.12.2024

2. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.28513/2023 தீர்ப்பு நாள் 11.07.2024

3. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட மேல்முறையீடு மனுக்கள் மற்றும் இன்மை அறிக்கைகள், சார்ந்த அலுவலர்கள் / பணியாளர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள்.

4. நீலகிரி, புதுக்கோட்டை, கரூர், தூத்துக்குடி, திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து / சம்பந்தப்பட்ட உதவியாளர்களிடமிருந்து பெறப்பட்ட மேல்முறையீடு மனுக்கள் மற்றும் இன்மை அறிக்கைகள்,

5. நாகப்பட்டினம், மாநில திட்ட அலுவலகத்தின் (ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி) உதவியாளர் திரு.இரா.அருள்ஜோதி என்பாரது விண்ணப்பம் நாள் 25.11.2024 (இவ்வியக்ககம் பெறப்பட்ட நாள் 29.11.2024)

6. தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண் 11258/அ1/2024 நாள் 27.11.2024 (இவ்வியக்ககம் பெறப்பட்ட நாள் 04.12.2024)

7.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண் 62888/அ4/இ3/2024 நாள் 18.12.2024

-----

சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு W.P.(MD) No. 28513 of 2023 நாள் 11.07.2024 தீர்ப்பாணையினை செயல்படுத்தும் பொருட்டு 15.03.2012 நிலவரப்படி உதவியாளர் தேர்ந்தோர் பட்டியலில் இடம் பெற்ற தகுதியான நபர்களின் பெயர்கள், 15.03.2023 ன்படி பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வுக்கான கூடுதல் தேர்ந்தோர் பட்டியலில் சேர்க்கப்படாமல் விடுபடக்கூடாது என்ற நோக்கில் பார்வை (1) இல் காணும்

www.Padasalai.Net

14.10.2024 மற்றும் 22.11.2024 நாளிட்ட செயல்முறைகளில் மேல்முறையீடு மனுக்கள் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பார்வை 4 இன்படி முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் நேரடியாக தனியர்களிடமிருந்து பெறப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான நபர்களின் பெயர்களை உரிய இடத்தில் சேர்த்தும், தகுதியில்லாத நபர்களின் பெயர்களை கூடுதல் தேர்ந்தோர் பட்டியலில் சேர்க்க வழிவகை இல்லையென தெரிவித்தும் 22.11.2024 மற்றும் 02.12.2024 ஆகிய தேதிகளில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பார்வை 5 மற்றும் 6 இன்படி பெறப்பட்ட மேல்முறையீடு மனுக்கள் தனியர்களின் நலன்கருதி பரிசீலிக்கப்பட்டதில் அன்னார்கள் 16.03.2012 அன்று இறுதியான துறைத் தேர்வினை நிறைவு செய்த காரணத்தால் பின்வரும் நபர்களின் பெயர்கள் 15.03.2023 ன்படியான கூடுதல் தேர்ந்தோர் பட்டியலில் சேர்க்க வழிவகை இல்லை.

| வ. எண். | பெயர் / பதவி பணிபுரியும் அலுவலகம் திரு./திருமதி. | கோரிக்கை/ நீக்கம் | கூடுதல் தேர்ந்தோர் பட்டியலில் சேர்க்க வழிவகை இல்லாததற்கான காரணம் |
|---|---|---|---|
| 1 | இரா.அருள்ஜோதி, உதவியாளர், மாவட்ட திட்ட அலுவலகம் (ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி) நாகப்பட்டினம் | பெயர் சேர்க்க கோருதல் | 12.06.2009 அன்று இளநிலை உதவியாளராக TNPSC Group VI 2007 ல் தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெற்று பணியில் சேர்ந்துள்ளார். இறுதியாக துறைத் தேர்வு கணக்குத் தேர்வு பாகம் 1 ஐ 16.03.2012 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் ஆகையால் இக்கூடுதல் தேர்ந்தோர் பட்டியலில் சேர்க்க வழிவகை இல்லை. |
| 2 | டி,ஜே.கே.இராஜாசிங், உதவியாளர் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம் | பெயர் சேர்க்க கோருதல் | 22.08.1991 அன்று இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் நியமனம் பெற்று பணியில் சேர்ந்துள்ளார். இறுதியாக துறைத் தேர்வு கணக்குத் தேர்வு பாகம் 1 ஐ 16.03.2012 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் ஆகையால் இக்கூடுதல் தேர்ந்தோர் பட்டியலில் சேர்க்க வழிவகை இல்லை. |

www.Padasalai.Net

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை தீர்ப்பாணையினை செயல்படுத்தும் நிகழ்வில் 02.12.2024 அன்று வெளியிடப்பட்ட கூடுதல் தேர்ந்தோர் பட்டியலில் உள்ள 60 உதவியாளர்களின் பணிசார் விவரங்கள், துறைத் தேர்வுகள் தேர்ச்சி, தட்டச்சர்களாக நியமனம் பெற்றவர்களின் ஒருவருட இளநிலை உதவியாளர் பயிற்சி, தகுதிகாண் பருவம் முடித்தல் ஆகியவை கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. இதில் 15.03.2013 நிலவலரப்படி உதவியாளர் தேர்ந்தோர் பட்டியலில் இருந்த 29 **நபர்களுக்கு அவர்களின் தகுதியின் அடிப்படையில் எதிர்வரும் பதவி உயர்வுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அமைய** 15.03.2012 க்கு முன்தேதியிட்டு ஆணைவழங்க பரிசீலிக்கப்பட்டதில் 17 உதவியாளர்களின் பெயர்கள் 15.03.2012 க்கு முன்தேதியிட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் தட்டச்சர்களாக நியமனம் பெற்றவர்கள் சார்பாக, தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 30 (c) No Typist Shall be eligible for promotion as Assistant or to the posts which carry the scale of Pay of Assistant in any department unless he has undergone trainin as Junior Assistant for a period of one year without detrimental to his Typist work. மற்றும் அரசாணை (நிலை) எண் 417 பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை நாள் 01.12.1993 ல் பத்தி 4 (c) ல் all the seniors in the category of Typists who are likely to get their promotion as Assistants in the course of next one or two years shall be asked to undergo training as Junior Assistants for a period of one year by allotting a few subjects few subjects covering different aspects of the department and they shall be allowed to dispose of the files without detriment to their typing work என தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ மேற்காண் விதிகள், அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தட்டச்சர்களாக நியமனம் பெற்ற கீழ்காணும் 8 உதவியாளர்கள் அவரவர் முடிக்கப்படவேண்டிய ஒருவருட இளநிலை உதவியாளர் பயிற்சியினை 15.03.2012 அறுதியிட்ட நாளில் நிறைவு செய்யப்படாமல் 15.03.2012 க்கு பின்னர் நிறைவு செய்துள்ளனர், எனவே பின்வரும் 8 உதவியாளர்களின் பெயர்கள் 15.03.2012 நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வு பட்டியலில் சேர்த்து முன்தேதியிட்டு ஆணை வழங்க இயலாத நிலை உள்ளது.

**பட்டியல் – 1**

| வ.எ | பெயர், பதவி, (திரு/திருமதி) | பணிபுரியுமிடம் | ஒரு வருட இளநிலை உதவியாளர் பயிற்சி விவரம் | Panel S.No |
|---|---|---|---|---|
| 1 | ஜா.ஜெயா,<br>உதவியாளர் | மாவட்டக் கல்வி அலுவலகம், (இடைநிலை) திருநெல்வேலி | 23.07.2012 முதல் 22.07.2013 | 4 (b) |

www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | அ.ஹெர்மன், உதவியாளர், | அரசு மேல்நிலைப் பள்ளி, அசோகபுரம், கோயம்புத்தூர் | ஜனவரி 2012 முதல் ஆகஸ்ட் 2013 | 15 (c) |
| 3 | பா.லெட்சுமி, உதவியாளர், | மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி) வள்ளியூர், திருநெல்வேலி | 01.08.2011 முதல் 31.07.2012 | 19 (c) |
| 4 | மா. கலையரசி, உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், வெம்பாக்கம், திருவண்ணாமலை | 12.01.2012 முதல் 11.01.2013 | 21 (b) |
| 5 | க. பொன்னுசாமி உதவியாளர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் | பணிப்பதிவேடு பதிவில் பயிற்சி காலம் குறிப்பிடப்படவில்லை | 36 (d) |
| 6 | ரா. தேவி, உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், எலச்சிபாளயைம், நாமக்கல் | 01.01.2012 முதல் 31.12.2012 | 36 (e) |
| 7 | க. செல்வராஜ், உதவியாளர், | மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக்கல்வி), தென்காசி. | 01.06.2011 முதல் 31.05.2012 | 44 (a) |
| 8 | எஸ். சர்புன்பீபீ, உதவியாளர் | மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை) பெரம்பலூர் | 01.01.2012 முதல் 04.04.2013 | 36 (b) |

❖ இதேபோல் பின்வரும் உதவியாளர்கள் தமது பவானி சாகர் தேர்வினை தனி தேர்வராக (Second Attempt) தேர்ச்சி பெற்ற வகையில் தங்களது தகுதிகாண்பருவம் 15.03.2012 க்கு பின்னர் முடித்துள்ள காரணத்தால் இவர்களது பெயர்களும் 15.03.2012 நிலவரப்படி உதவியாளர் பதவி உயர்வு பட்டியலில் சேர்த்து முன்தேதியிட்டு ஆணை வழங்க இயலாத நிலை உள்ளது.

www.Padasalai.Net

**பட்டியல் – 2**

| வ.எ | பெயர், பதவி, | பணிபுரியுமிடம் | தகுதிகாண் பருவம் முடித்த நாள் | Panel S.No |
|---|---|---|---|---|
| 1 | ச. சங்கரேஸ்வரி, உதவியாளர் | மாவட்டக் கல்வி அலுவலகம்( இடைநிலை கோவில்பட்டி, தூத்துக்குடி | 27.05.2012 | 47 (b) |
| 2 | பா. பரமேஸ்வரி, உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் | 26.05.2012 | 76 (b) |

❖ மூன்றாவதாக கீழே குறிப்பிடப்பட்ட உதவியாளர்கள் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்யும் நாள் 15.03.2012 க்குள் இருப்பினும், இவர்கள் அறுதியிட்ட நாளான 15.03.2012 க்கு பின்னர் முடித்துள்ளனர், அரசுக் கடித (எம்.எஸ்) எண் 174 ப.க.துறை நாள் 11.11.2002 பத்தி எண் 5 (ஆ) வின்படி பவானிசாகர் அடிப்படை பயிற்சியை 16.04.2012 முதல் 30.05.2012 வரை காலதாமதமாக நிறைவு செய்துள்ளார். இதன் அடிப்படையில் வரிசை எண் (1) ல் குறிப்பிட்டுள்ள உதவியாளர் திரு.ரெ.ராஜேந்திரன் என்பாருக்கு நாகப்பட்டினம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் மூ.மு.எண் 1176/அ1/2017 நாள் 18.05.2017ன்படி பவானி சாகர் அடிப்படைப் பயிற்சி நிறைவு செய்த நாளான 30.05.2012 பிற்பகல் தகுதிகாண் பருவம் நிறைவு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது, இவ்வாணையானது மாவட்டக் கல்வி அலுவலரால் விதிகளின்டி சரியாக வழங்கப்பட்டுள்ளபோதிலும், தாமதமாக பயிற்சிக்கு அனுப்பப்பட்ட காரணத்தால் இரண்டாண்டு பணி நிறைவு நாளான 11.06.2011 பிற்பகல் தகுதிகாண் பருவம் நிறைவு செய்து மேற்காணும் அரசு கடிதத்தின்படி விதி தளர்வு செய்து இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண்பருவம் முடித்து அரசால் ஆணை வெளியிடப்பட்ட பின்னர் இவரது மனு பெறப்படுமாயின் பரிசீலனைக்குப் பின்னர். 15.03.2012 உதவியாளர் தேர்ந்தோர் பட்டியலில் சேர்த்து முன்தேதியிட்டு ஆணை வழங்க இயலும்

❖ இதேபோல் வரிசை எண் (2) ல் குறிப்பிட்டுள்ள உதவியாளர் திரு.பி.ஆரோக்கியசாமி என்பார் தனது பவானி சாகர் அடிப்படைப் பயிற்சியினை 16.04.2012 முதல் 30.05.2012 வரை காலதாமதமாக நிறைவு செய்துள்ளனர். இவர்கள் பொருட்டு தகுதிகாண் பருவம் முடித்தல் ஆணை பவானி சாகர் பயிற்சி முடித்த கடைசி தேதியில் அதாவது 30.05.2012 அன்று மாவட்டக் கல்வி அலுவலர் நிலையில் தகுதிகாண் பருவம் ஆணை

www.Padasalai.Net

பிறப்பிக்கப்படவேண்டும். ஆனால், இவருக்கு மேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் செயல்முறைகள் ந.க.எண் 6377/அ1/2012 நாள் 13.02.2013 இன்படி 11.06.2011 பிற்பகல் தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வரிசை எண் (3) குறிப்பிட்டுள்ள உதவியாளர் திரு.அ.ராபின்சன் தனது பவானி சாகர் அடிப்படைப் பயிற்சியினை 23.02.2012 முதல் 10.04.2012 வரை காலதாமதமாக நிறைவு செய்துள்ளார். இவருக்கு தக்கலை மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 3940/அ1/2012 நாள் 17.08.2012 இன்படி 10.06.2011 பிற்பகல் தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில் இரண்டாண்டு பணிக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு முறையே (11.06.2011 / 10.06.2011 அன்று) தகுதிகாண்பருவம் முடிக்கும் அதிகாரம் அரசுக்கு மட்டுமே உள்ளதால் அரசுக் கடித (எம்.எஸ் எண் 174 ப.க.துறை நாள் 11.11.2002 பத்தி எண் 5 (ஆ) வின்படி பயிற்சிக்கு தாமதமாக அனுப்பப்பட்ட காரணத்தால் விதித்தளர்வு செய்து இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து அரசால் ஆணை வெளியிட்ட பின்னர் இவர்களது மனு பெறப்படுமாயின் பரிசீலனைக்குப் பின்னர் 15.03.2012 உதவியாளர் தேர்ந்தோர் பட்டியலில் முன்தேதியிட்டு பெயர் சேர்த்து முன்னுரிமை வழங்குவது குறித்து பரிசீலிக்க இயலும்.

**பட்டியல் – 3**

| வ.எ | பெயர், பதவி, | பணிபுரியுமிடம் | குறிப்பு | Panel S.No |
|---|---|---|---|---|
| 1 | ரெ. ராஜேந்திரன், உதவியாளர் | முதன்மைக் கல்வி அலுவலகம், மயிலாடுதுறை | 30.05.2012 தகுதிகாண் பருவம் முடித்த நாள் | 47 (c) |
| 2 | பி.ஆரோக்கியசாமி, உதவியாளர் | மாவட்டக் கல்வி அலவலகம், (தொடக்கக் கல்வி) மதுரை | 11.06.2011 பிப தகுதிகாண் பருவம் முடித்த நாள் | 56 (a) |
| 3 | அ. ராபின்சன், உதவியாளர் | மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலைக் கல்வி) மார்த்தாண்டம், கன்னியாகுமரி | 10.06.2011 தகுதிகாண் பருவம் முடித்த நாள் | 76 (c) |

www.Padasalai.Net

❖ தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 இன்படி தனது பதவி உயர்வினை உரிமைவிடல் செய்யும் நிகழ்வில் தனியரால் அளிக்கப்படும் தேதியினை அடிப்படையாகக் கொண்டு பதவி உயர்வு தற்காலிக உரிமைவிடல் (மூன்று ஆண்டுகளுக்கு) நியமன அலுவலர்களால் வழங்கப்பட்டுவருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதி எண் 57 ன்படி தற்காலிக உரிமைவிடல் செய்தவர்களின் பெயர்கள் மீண்டும் பதவி உயர்வு பட்டியலில் முன்றாண்டுகளுக்கு பிறகுதான் சேர்க்க இயலும்.

இதன்படி பின்வரும் உதவியாளர்கள் 15.03.2019 நிலவரப்படி வெளியிடப்பட்ட பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வுக்கான இறுதி தேர்ந்தோர் பட்டியலிருந்து பதவி உயர்வு பெற்ற பின்னர் குடும்ப சூழ்நிலை காரணமாக தற்காலிக உரிமைவிடல் செய்துள்ளனர். தற்காலிக உரிமைவிடல் வழங்க கோரி முறையே 30.06.2020 மற்றும் 18.03.2020 ஆகிய தேதிகளில் விண்ணப்பித்துள்ளனர். எனவே, தனியர்களின் விண்ணப்பத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதி எண் 57 ல் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மூன்று ஆண்டு காலம் நிறைவடையவில்லை.

**பட்டியல் – 4**

| வ.எ | பெயர், பதவி, | பணிபுரியுமிடம் | பேனல் ஆண்டு | தற்காலிக உரிமை விடல் கடிதம் நாள் | தற்காலிக உரிமை விடல் ஆணை நாள் | Panel S.No |
|---|---|---|---|---|---|---|
| 1 | செ.மா. நடராஜன் உதவியாளர், | மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி ) கோபிசெட்டிபாளையம் ஈரோடு மாவட்டம். | 15.03. 2019 | 30.06. 2020 | 12.01. 2024 | 1 (a) |
| 2 | இரா.ராஜகுரு உதவியாளர் | மாவட்ட திட்ட அலுவலகம், (ஒ.ப.க) கரூர் | 15.03. 2019 | 18.03. 2020 | 03.10. 2020 | 1 (b) |

எனவே மேற்காணும் 4 பட்டியல்களில் உள்ள 15 உதவியாளர்களின் பெயர்கள், அறுதியிட்ட நாளான 15.03.2012 க்கு பின்னர் தங்களது இளநிலை உதவியாளர் ஒருவருட பயிற்சி, தகுதிகாண் பருவம் முறைப்படுத்துதல், பவானி

www.Padasalai.Net

சாகர் பயிற்சி இரண்டாவதாக தேர்ச்சி (Second Attempt) மற்றும் தற்காலிக உரிமைவிடல் காலம் மூன்று ஆண்டுகள் நிறைவு பெறாமை போன்ற காரணங்களுக்காக 02.12.2024 அன்று வெளியிடப்பட்ட பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வுக்கான கூடுதல் தேர்ந்தோர் பட்டியலிலிருந்து நீக்கம் செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மேற்கண்டவாறு நீக்கம் செய்யப்பட்ட பிறகு திருத்திய கூடுதல் தேர்ந்தோர் பட்டியல் மற்றும் நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. இப்பட்டியலினை அனைத்து சார்நிலை அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இணை இயக்குநர்,
(பணியாளர் தொகுதி)

27/12/24

இணைப்பு : 1) திருத்திய கூடுதல் தேர்ந்தோர் பட்டியல்
(Assitant to Desk Revised Panel)
2) 02.12.2024 நாளிட்ட கூடுதல் தேர்ந்தோர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட உதவியாளர்கள் பட்டியல்.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின் அஞ்சல் மூலமாக)

நகல் :-

1. மாநில திட்ட இயக்குநர் , ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை – 6.
2. உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 6.
3. இயக்குநர்,தொடக்கக்கல்வி இயக்ககம் ,சென்னை –6.
4. இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்,சென்னை 6.
5. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை –6
6. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை –6.
7. இவ்வியக்கக அ2 பிரிவிற்கு
8. தகவல் பலகைக்கு

} தங்கள் அலுவலகப் பணியாளர்கள் சார்பான விவரம் அளிக்கும் பொருட்டு பணிந்தனுப்படுகிறது

www.Padasalai.Net